**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.No.54/2024**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ம.சா.3 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சக்திவேல் | த/பெ.: | பாலமுருகன் |
| கிராமம்: | நெடும்பலம் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | மெக்கானிக் |
| வயது: | 24 | முகவரி: | நெடும்பலம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 31.10.2025.

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் மனுதாரர்கள் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் மெக்கானிக் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதும் கொண்டு வரவில்லை. நான் டிப்ளமோ மெக்கானிக்கல் பிரிவு படிப்பு ஏதேனும் படித்துள்ளேனா என்றால் நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். நான் இளநிலை மெக்கானிக்காக பணிபுரிவதற்கு பணி நியமன உத்தரவு ஏதேனும் வழங்கியுள்ளார்களா என்றால் இல்லை. பொதுவாக ஒரு நிறுவனத்தில் 4 நபர்களுக்கு மேல் பணிபுரிந்தால் அந்த நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற விவரங்கள் ஏதும் தெரியுமா என்றால் தெரியாது. இறந்த குழலரசன் நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல எந்த பழுது நீக்கும் கடையும் வைத்திருக்கவில்லை. நான் அதில் பணிபுரிந்ததும்

இல்லை. நான் கூறியுள்ளது போல எந்த ஊதியமும் அவரிடமிருந்து பெறவில்லை. இந்த மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மனுதாரர்கள் அதிக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.